www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

இயற்பியல்

தொகுதி - 2

12-ஆம் வகுப்பு

2019 - 20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது

சிறப்பம்சங்கள்

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள்.
- முக்கிய வரையறைகள், நினைவில் கொள்ளவேண்டிய குறிப்புகள்.
- முக்கியமான சூத்திரங்கள்
- மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள், பயிற்சி கணக்குகள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் விடைகளுடன்.
- சுராவின் மாதிரி வினாத்தாள்கள் (1 மற்றும் 2) விடைகளுடன்.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

பொருளடக்கம்

அலகு 6	ஒளியியல்	1 - 92
அலகு 7	கதிர்வீச்சு மற்றும் பருப்பொருளின் இருமைப்பண்பு	93 - 132
அலகு 8	அணு மற்றும் அணுக்கரு இயற்பியல்	133 - 178
அலகு 9	குறைகடத்தி எலக்ட்ரானியல்	179 - 222
அலகு 10	தகவல் தொடர்பு அமைப்புகள்	223 - 248
அலகு 11	இயற்பியலின் அண்மைக்கால வளர்ச்சிகள்	249 - 266
	அரசு மாதிரி வினாத்தாள் விடைகளுடன்	267 - 282
	சுராவின் மாதிரி வினாத்தாள் விடைகளுடன்	283 - 298

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

அலகு 6

ஒளியியல்

குறிப்புச் சட்டகம்

6.1 அறிமுகம்
6.1.1 கதிர் ஒளியியல்
6.1.2 எதிரொளிப்பு
6.1.3 ஒளி எதிரொளிப்பினால் ஏற்படும் விலகுகோணம்
6.1.4 சமதள அடியில் பிம்பம் தோன்றுதல்
6.1.5 சமதள ஆடியில் தோன்றும் பிம்பத்தின் பண்புகள்
6.1.6 சமதள ஆடியில் தோன்றும் மெய் மற்றும் மாயபிம்பங்கள்
6.2 கோளக ஆடிகள்
6.2.1 அண்மை அச்சுக்கதிர்கள் மற்றும் ஓரக்கதிர்கள் (Paraxial Rays and Marginal Rays)
6.2.2 குவியத்தூரம் (f) மற்றும் வளைவு ஆரம் (R) இவற்றுக்கு இடையேயான தொடர்பு
6.2.3 கோளக ஆடிகளில் தோன்றும் பிம்பங்கள்
6.2.4 கார்ட்டீசியன் குறியீட்டு மரபு
6.2.5 ஆடிச்சமன்பாடு
6.2.6 கோளக ஆடிகளில் ஏற்படும் பக்கவாட்டு உருப்பெருக்கம்
6.3 ஒளியின் வேகம்
6.3.1 ஒளியின் வேகத்தைக் கண்டறிவதற்கான ஃபிஸீயுமுறை (Fizeau's Method)
6.3.2 வெவ்வேறு ஊடகங்களின் வழியே ஒளியின் வேகம்
6.3.3 ஒளிவிலகல் எண்
6.3.4 ஒளிப்பாதை (Optical path)
6.4 ஒளிவிலகல் (Refraction)
6.4.1 ஒளிவிலகலினால் ஏற்படும் விலகுகோணம்
6.4.2 ஒளி விலகலின் பண்புகள்
6.4.3 மீளும் கொள்கை (Principle of reversibility)
6.4.4 ஒப்புமை ஒளிவிலகல் எண்
6.4.5 தோற்ற ஆழம்
6.4.6 மாறுநிலைக்கோணம் மற்றும் முழு அக எதிரொளிப்பு
6.4.7 முழு அக எதிரொளிப்பின் விளைவுகள்
6.4.8 கண்ணாடிப்பட்டகத்தின் (glass slab) வழியே ஒளி விலகல்
6.5 ஒற்றை கோளகப்பரப்பில் ஏற்படும் ஒளிவிலகல் (Refraction at single spherical surface)
6.5.1 ஒற்றை கோளகப்பரப்பில் ஏற்படும் ஒளி விலகலுக்கான கோவை (Equation for refraction at single spherical surface)
6.5.2 ஒற்றை கோளகப்பரப்பில் ஏற்படும் பக்கவாட்டு உருப்பெருக்கம் (Lateral magnification in single spherical surface)
6.6 மெல்லிய லென்ஸ்கள் (Thin Lens)
6.6.1 முதன்மை மற்றும் இரண்டாம் குவியப்புள்ளிகள்
6.6.2 லென்ஸ்களின் குவியத்தூரத்திற்கான குறியீட்டு மரபு
6.6.3 லென்ஸ் உருவாக்குபவரின் சமன்பாடு மற்றும் லென்ஸ் சமன்பாடு
6.6.4 மெல்லிய லென்ஸின் பக்கவாட்டு உருப்பெருக்கம் (Lateral magnification in thin lens)
6.6.5 லென்ஸின் திறன் (Power of lens)
6.6.6 ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டுள்ள இரண்டு லென்ஸ்களின் கூட்டமைப்பின் குவியத்தூரம்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. திசையொப்பு பண்பினைப் பெற்ற (Isotropic) ஊடகத்தின் வழியே செல்லும் ஒளியின் வேகம், பின்வருவனவற்றுள் எதனை சார்ந்துள்ளது?

(a) அதன் ஒளிச்செறிவு

(b) அதன் அலைநீளம்

(c) பரவும் தன்மை

(d) ஊடகத்தைப் பொருத்து ஒளிமூலத்தின் இயக்கம். [விடை: (b) அதன் அலைநீளம்]

2. 10 cm நீளமுடைய தண்டு ஒன்று, 10 cm குவியத்தூரம் கொண்ட குழி அடியின் முதன்மை அச்சில் வைக்கப்பட்டுள்ளது. தண்டின் ஒரு முனை குழிஆடியின் முனையிலிருந்து 20 cm தொலைவில் இருந்தால், கிடைக்கும் பிம்பத்தின் நீளம் என்ன? (AIPMT முதன்மைத் தேர்வு 2012)

(a) 2.5 cm (b) 5 cm

(c) 10 cm (d) 15 cm

[விடை: (b) 5 cm]

3. குவியத்தூரம் f கொண்ட குவிஆடியின் முன்பாகப்பொருளொன்று வைக்கப்பட்டுள்ளது. பெரிதாக்கப்பட்ட மெய் பிம்பம் கிடைக்க வேண்டுமெனில், குவிஆடியிலிருந்து பொருளை வைக்க வேண்டிய பெரும மற்றும் சிறுமத் தொலைவுகள் யாவை? *(IEE Main 2009)*

(a) $2f$ மற்றும் c

(b) c மற்றும் ∞

(c) f மற்றும் O

(d) மேற்கண்ட எதுவுமில்லை

[விடை: (d) மேற்கண்ட எதுவுமில்லை]

4. காற்றிலிருந்து ஒளிவிலகல் எண் 2 கொண்ட கண்ணாடிப் பட்டகத்தின் மீது ஒளி விழுகிறது எனில், சாத்தியமான பெரும விலகுகோணத்தின் மதிப்பு என்ன?

(a) 30^{o} (b) 45^{o}

(c) 60^{o} (d) 90^{o}

[விடை: (a) 30^{o}]

5. காற்றில் ஒளியின் திசைவேகம் மற்றும் அலைநீளம் முறையே V_a மற்றும் λ_a. இதே போன்று தண்ணீரில் V_w மற்றும் λ_w எனில், தண்ணீரின் ஒளிவிலகல் எண் என்ன?

(a) $\frac{V_w}{V_a}$ (b) $\frac{V_a}{V_w}$

(c) $\frac{\lambda_w}{\lambda_a}$ (d) $\frac{V_a\lambda_a}{V_w\lambda_w}$

[விடை: (b) $\frac{V_a}{V_w}$]

6. பின்வருவனவற்றுள் விண்மீன்கள் மின்னுவதற்கான சரியான காரணம் எது?

(a) ஒளி எதிரொளிப்பு

(b) முழு அக எதிரொளிப்பு

(c) ஒளி விலகல்

(d) தளவிளைவு [விடை: (c) ஒளி விலகல்]

7. ஒளிவிலகல் எண் 1.47 கொண்ட இருபுற குவிலென்ஸ் ஒன்று திரவம் ஒன்றில் மூழ்கி, சமதள கண்ணாடித் தகடு போன்று செயல்படுகிறது எனில், திரவத்தின் ஒளி விலகல் எண் எவ்வாறு இருக்க வேண்டும்?

(a) ஒன்றைவிடக் குறைவு

(b) கண்ணாடியைவிடக் குறைவு

(c) கண்ணாடியைவிட அதிகமாக

(d) கண்ணாடிக்குச் சமமாக

[விடை: (d) கண்ணாடிக்குச் சமமாக]

8. தட்டைக் குவிலென்ஸ் ஒன்றின் வளைவுப்பரப்பின் வளைவு ஆரம் 10 cm. மேலும், அதன் ஒளிவிலகல் எண் 1.5. குவிலென்சின் தட்டைப்பரப்பின் மீது வெள்ளி பூசப்பட்டால் அதன் குவியத்தூரம்

(a) 5 cm (b) 10 cm

(c) 15 cm (d) 20 cm

[விடை: (b) 10 cm]

9. ஒளிவிலகல் எண் 1.5 கொண்ட கண்ணாடிப் பட்டகம் ஒன்றினுள் காற்றுக் குமிழ் ஒன்று உள்ளது. [செங்குத்துப் படுகதிர் நிலைக்கு அருகில்] ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது, காற்றுக் குமிழ் 5 cm ஆழத்திலும், மற்றொரு பக்கம் வழியாக பார்க்கும்போது 3 cm ஆழத்திலும் உள்ளது எனில், கண்ணாடிப் பட்டகத்தின் தடிமன் என்ன?

(a) 8 cm (b) 10 cm

(c) 12 cm (d) 16 cm

[விடை: (c) 12 cm]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

53. விளிம்பு விளைவுக் கீற்றணி என்றால் என்ன?

விடை. (i) விளிம்பு விளைவுக் கீற்றணியில் சம அகலமுடைய, அதிக எண்ணிக்கையில் அமைந்த பிளவுகள் காணப்படுகின்றன.

(ii) பிளவுகளின் அகலம் விளிம்பு விளைவடையும் ஒளியின் அலைநீளத்துடன் ஒப்பிடத்தக்க அளவில் அமைந்திருக்கும்.

(iii) ஒளிபுகும் பொருளின் மீது வைர ஊசியினைக் கொண்டு ஒளிபுகாக்கோடுகள் வரையப்பட்டிருக்கும். வணிகரீதியில் செயல்படும் நவீன விளிம்பு விளைவுக் கீற்றணியில் ஒரு சென்டிமீட்டரில் 6000 ஒளிபுகாக் கோடுகள் வரையப்பட்டிருக்கும்.

54. பிரித்தறிதல் மற்றும் பிரிதிறன் என்றால் என்ன?

விடை. (i) பிரித்தறிதலின் தலைகீழிக்குப் பிரிதிறன் என்று பெயர். இதிலிருந்து கருவியின் சிறிய பிரித்தறிதல் பெரிய பிரிதிறனைக் கொடுக்கும் என அறியலாம்.

(ii) பிம்பங்களைத் தோற்றுவிப்பதன் மூலம், மிகச்சிறிய அல்லது அருகருகே உள்ள பொருள்களைப் பிரித்துப் பார்க்கும் அல்லது வேறுபடுத்திப் பார்க்கும் திறமைக்கு ஒளியியல் கருவியின் பிரிதிறன் என்று பெயர்.

(iii) பொதுவாகப் பிரித்தறிதல் என்ற சொல் உருவாகும் பிம்பத்தின் தரத்தையும், பிரிதிறன் என்பது ஒளியியல் கருவின் பிரித்தறியும் திறமையையும் குறிக்கும்.

55. ராலே நிபந்தனை என்றால் என்ன?

விடை. ரேலேயின் நிபந்தனையின்படி, இரண்டு புள்ளி ஒளி மூலங்கள் பிரித்தறியப்பட வேண்டுமெனில், அவற்றின் பிம்பங்களுக்கிடைப்பட்ட தொலைவு குறைந்தபட்சம் r_o தொலைவு இருக்க வேண்டும். கோணப் பிரித்தறிதலின் அலகு ரேடியன் (rad). மேலும், இது பின்வரும் சமன்பாட்டால் வழங்கப்படுகிறது.

$$\theta = \frac{1.22\lambda}{a}$$

56. தளவிளைவு என்றால் என்ன?

விடை. ஒளிஅலை பரவும் திசைக்குச் செங்குத்தாக உள்ள ஒரு குறிப்பிட்ட திசையில் ஒளியின் அதிர்வுகளை (மின்புலம் அல்லது காந்தப்புல வெக்டர்) அனுமதிக்கும் நிகழ்ச்சிக்கு ஒளியின் தளவிளைவு என்று பெயர்.

57. தளவிளைவு அடைந்த மற்றும் தளவிளைவு அடையாத ஒளிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?

விடை.

தளவிளைவு அடைந்த ஒளி	தளவிளைவு அடையாத ஒளி
ஒளிக்கதிர்பரவும் திசைக்குச் செங்குத்தாக உள்ள ஒரே ஒரு தளத்தில் மட்டும் மின்புல வெக்டர்கள் அதிர்வுகளைப் பெற்றிருக்கும்	ஒளிக்கதிர் பரவும் திசைக்குச் செங்குத்தாக உள்ள அனைத்து திசைகளிலும் மின்புல வெக்டர்களின் அதிர்வுகள் சமமாகப் பங்கிடப்பட்டிருக்கும்.
ஒளிக்கதிர் பரவும் திசையைப் பொருத்து சமச்சீரற்றது	ஒளிக்கதிர் பரவும் திசையைப் பொருத்து சமச்சீரானது.
தளவிளைவாக்கிகளைப் பயன்படுத்தி, தளவிளைவு அடையாத ஒளியிலிருந்து, தளவிளைவு அடைந்த ஒளி பெறப்படுகிறது.	மரபான ஒளி மூலங்களிலிருந்து இவ்வகையான ஒளி கிடைக்கிறது.

58. தேர்ந்தெடுக்கப்பட்ட உட்கவர்தல் மூலம் எவ்வாறு தளவிளைவு ஏற்படுகிறது என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

விடை. (i) தெரிவு உட்கவர்தல் என்பது பொருளின் ஒரு பண்பாகும். குறிப்பிட்ட ஒருங்கமைவு திசைக்கு இணையாக உள்ள தளத்தில் மட்டும் மின்புல அதிர்வுகளைப் பெற்றுள்ள ஒளி அலைகளைத் தன்வழியே செல்ல அனுமதித்தும், மற்ற அனைத்து ஒளி அலைகளையும் உட்கவரும். பொருளின் இப்பண்பிற்குத் தெரிவு உட்கவர்தல் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உட்கவர்தல் என்று பெயர்.

(ii) போலராய்டுகள் (Polaroids) அல்லது தளவிளைவாக்கிகள் என்பவை, மெல்லிய வணிகரீதியாகப் பயன்படும் தகடுகளாகும்.

(iii) இவை, தெரிவு உட்கவர்தல் பண்பை அடிப்படையாகக் கொண்டு, அதிகச் செறிவு கொண்ட முழுவதும் தளவிளைவு அடைந்த ஒளி அலைகளை உருவாக்குகின்றன. தெரிவு உட்கவர்தலை, இருவண்ணத் தன்மை (dichrosim) என்றும் அழைக்கலாம்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

(vi) இக்கூம்பினுள் ஒளி எந்தத் திசையிலும் ஒளி இழையின் உள்ளே நுழையலாம். (n_3 sin i_a) பதத்திற்கு ஒளி இழையின் எண்ணியல் துளை (Numerical aperture (NA)) என்று பெயர்.

$$NA = n_3 \sin i_a = \sqrt{n_1^2 - n_2^2}$$

(vii) வெளிப்புற ஊடகம் காற்று எனில் $n_3 = 1$ எனவே, எண்ணியல் துளை (NA) பின்வருமாறு மாற்றமடையும்.

$$NA = \sin i_a = \sqrt{n_1^2 - n_2^2}$$

5. கண்ணாடிப்பட்டகம் ஒன்றின் வழியாகப் பாயும் ஒளியின் பக்கவாட்டு இடப்பெயர்ச்சிக்கான சமன்பாட்டைப் பெறுக.

விடை. **(i)** கண்ணாடிப்பட்டகம் என்பது, கனசதுரக் கண்ணாடி ஆகும். இதன்வழியே ஒளி செல்லும்போது கண்ணாடிப்பட்டகத்தின் இரண்டு ஒளிவிலகு பரப்புகளிலும் ஒளிவிலகல் ஏற்படுகின்றது. கண்ணாடிப்பட்டகத்தின் உள்ளே ஒளி செல்லும்போது, அடர் குறை ஊடகத்தில் இருந்து (காற்று) அடர்மிகு ஊடகத்திற்கு (கண்ணாடி) ஒளி செல்கிறது.

(ii) எனவே, ஒளி செங்குத்துக்கோட்டை நோக்கி விலகும். கண்ணாடிப்பட்டகத்திலிருந்து ஒளி வெளியேறும்போது, அது அடர்மிகு ஊடகத்திலிருந்து, அடர்குறை ஊடகத்திற்கு வருகிறது. எனவே, ஒளி செங்குத்துக்கோட்டைவிட்டு விலகிச்செல்லும். இரண்டு ஒளி விலகல்களும் நிறைவுபெற்றபின் கண்ணாடிப்பட்டகத்திலிருந்து வெளிவரும் ஒளிக்கதிர் பக்கவாட்டு இடப்பெயர்ச்சி (L) அடைந்து படுகதிரின் திசையிலேயே பயணிக்கும்.

(iii) அதாவது, ஒளிக்கதிரின் திசையில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால், படுகதிர் மற்றும் விலகுகதிர் இரண்டும் ஒன்றுக்கொன்று இணையாக வெவ்வேறு பாதைகளில் செல்கின்றன. பக்கவாட்டு இடப்பெயர்ச்சியைக் கணக்கிட படத்தில் காட்டியுள்ளவாறு படுகதிர் மற்றும் விலகுகதிரின் பாதைகளுக்கு நடுவே செங்குத்துக்கோடு வரைய வேண்டும்.



கண்ணாடிப்பட்டகத்தில் ஏற்படும் ஒளிவிலகல்

(iv) கண்ணாடிப்பட்டகம் ஒன்றைக் கருதுக. அதன் தடிமன் (t), ஒளிவிலகல் எண்(n) ஆகும். இப்பட்டகம் காற்று ஊடகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒளியின் பாதையை ABCD எனக் கருதுக.

(v) படுகோணம் (i) மற்றும் விலகுகோணம் (r) இரண்டும் செங்குத்துக்கோடுகள் N_1 மற்றும் N_2ஐ பொருத்துக் கண்ணாடிப்பட்டகத்தின் B மற்றும் C புள்ளிகளில் கணக்கிடப்படுகின்றன. C புள்ளியில் விலகுகதிர் மற்றும் திசைமாறா படுகதிர் இவற்றிற்கிடையே வரையப்பட்ட செங்குத்துக்கோடு (CE) பக்கவாட்டு இடப்பெயர்ச்சி (L) ஐ கொடுக்கும்.

செங்கோண முக்கோணம் ΔBCEயில்

$$\sin(i - r) = \frac{L}{BC} ; BC = \frac{L}{\sin(i-r)} \quad ...(1)$$

செங்கோண முக்கோணம் ΔBCF-யில்

$$\cos(r) = \frac{t}{BC} ; BC = \frac{t}{\cos(r)} \quad ...(2)$$

சமன்பாடுகள் (1) மற்றும் (2) இரண்டையும் ஒப்பிடும்போது

$$\frac{L}{\sin(i-r)} = \frac{t}{\cos(r)}$$

சமன்பாட்டினை மாற்றி அமைக்கும்போது

$$L = t\left(\frac{\sin(i-r)}{\cos(r)}\right)$$

(vi) பக்கவாட்டு இடப்பெயர்ச்சி, கண்ணாடிப் பட்டகத்தின் தடிமனைச் சார்ந்துள்ளது, தடிமன் அதிகமெனில் பக்கவாட்டு இடப்பெயர்ச்சியும் அதிகமாகும். மேலும் பக்கவாட்டு இடப்பெயர்ச்சி படுகோணத்தையும் சார்ந்துள்ளது. அதிக படுகோணமதிப்பிற்கு பக்கவாட்டு இடப்பெயர்ச்சி அதிகம்.

ஒளியியல்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

(iv) தற்போது முப்பட்டகத்தை நீக்கிவிட்டு, இணையாக்கியிலிருந்து வரும் பிம்பத்தை நேரடியாக தொலைநோக்கியின் வழியே பார்க்கும் வகையில் தொலைநோக்கியைச் சுழற்ற வேண்டும். நேரடி பிம்பத்துடன் செங்குத்துக் குறுக்குக்கம்பி பொருந்தும் வகையில் அமைத்து அதற்கான வெர்னியர் அளவீடுகளைக் குறித்துக்கொள்ள வேண்டும்

(v) இவ்விரண்டு அளவீடுகளின் வேறுபாடு சிறுமதிசைமாற்றக் கோணத்தைக் (D) கொடுக்கும். முப்பட்டகம் செய்யப்பட்ட பொருளின் ஒளிவிலகல் எண்ணைப் பின்வரும் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் கணக்கிடலாம்.

$$n=\frac{\sin\left(\frac{A+D}{2}\right)}{\sin\left(\frac{A}{2}\right)}$$

வெற்றிட முப்பட்டகம் ஒன்றினுள் திரவத்தை நிரப்பி, மேற்கூறப்பட்ட அதே முறையில் சோதனைகளை நிகழ்த்தி திரவத்தின் ஒளிவிலகல் எண்ணைக் காணலாம்.

IV. கருத்துரு வினாக்கள் :

1. தட்டுவடிவ விண்ணலைக் கம்பிகள் (Dish antennas) ஏன் உட்குழிந்து காணப்படுகின்றன?

விடை. (i) தட்டுவடிவ விண்ணலைக் கம்பியின் உட்பகுதி குழிந்துள்ளது. ஏனெனில், பரப்பப்படும் அலை சைகைகளை இணைக்கதிர்களாக ஒரே திசையில் பெறுவதற்கு எளிதாக உள்ளது.

(ii) விண்ணலைக் கம்பியின் மிக முக்கிய பண்பளவு திசை நெறிப்படுத்தும் திறன் (Directivity). குறிப்பிட்ட திசைகளில் ஒரு முனைப்படுத்தி பரப்பும் திறன் அல்லது குறிப்பிட்ட திசைகளில் இருந்து வரும் மின்காந்த அலைகளை மட்டுமே பெரும அளவில் ஏற்கும் திறனால் விண்ணலைக்கம்பி குழிவாக இருக்கும்போது அதன் திறன் அதிகரிக்கும்.

2. தண்ணீரின் உள்ளே தோன்றும் நீர்க்குமிழிகள் எவ்வகையான லென்ஸ்களை உருவாக்கும்?

விடை. (i) நீரினுள் நீர்க்குமிழிகள் இருபுற குவிலென்சை உருவாக்குகிறது.

(ii) காற்றுக்குமிழிகள் நீரினுள் விரிக்கும் லென்சாக செயல்படுகிறது.

(iii) இது உயர் ஒளிவிலகல் எண் உடைய ஊடகத்திலிருந்து ஒளிபுகும்போது இரு குவி இடைப்பரப்புகள் ஒன்றையொன்று சந்திக்கும் புள்ளியாக அமையும்.

(iv) எனவே, நீரில் காற்றுக்குமிழிகள் கண்ணாடியால் செய்யப்பட்ட குழி லென்சு போல் செயல்படும்.

3. இரண்டு லென்ஸ்களைக் கொண்டு, சுழிதிறன் கொண்ட லென்ஸ் அமைப்பை உருவாக்க முடியுமா?

விடை. (i) இரு லென்சுகளைக் கொண்டு சுழி திறன் கொண்ட லென்ஸ் அமைப்பை உருவாக்க இயலாது.

(ii) ஏனெனில் லென்சு கூட்டமைப்பின்திறன் என்பது தனித்தனி லென்சுகளின் திறன்களின் குறியியல் கூடுதலுக்கு சமம்.

(iii) அவை குவிலென்சுகளுக்கு நேர்க்குறியாகவும், குழி லென்சுகளுக்கு எதிர்குறியாகவும் இருக்கும்.

(iv) மேலும், லென்சு கூட்டமைப்பின் அவசியம் யாதெனில் பிம்பத்தின் துல்லியத் தன்மையை மேம்படுத்தவும், உருப்பெருக்கத்தை உண்டாக்கவும் தான்.

4. வானம் நீல நிறமாகவும், மேகங்கள் வெண்மை நிறமாகவும் இருக்க காரணம் என்ன?

விடை. (i) நமது கண்களின் உணர்வு நுட்பம் ஊதா வண்ணத்தை விட நீல வண்ணத்திற்கு அதிகம். இத்தகைய காரணங்களினால்தான் வானம் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது.

(ii) மேகங்களில் அலைநீளத்தைப் பொருத்து ஒளிச்சிதறல் ஏற்படாமல் அனைத்து வண்ணங்களும் சம அளவில் சிதறலடைகின்றன. இதன் காரணமாகத் தான் மேகம் வெண்மை நிறமாகக் காட்சியளிக்கிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது 1 மதிப்பெண்

1. சமதள ஆடியால் பிரதிபலிக்கப்படும் ஒளி மெய் பிம்பத்தை எந்த சூழ்நிலையில் உருவாக்கும்?
   (a) ஆடியின் மீது விழும் கதிர்கள் விரிவடையும் போது
   (b) ஆடியின் மீது படும் கதிர்கள் குவிக்கப்படும் போது
   (c) ஆடிக்கு மிக அருகில் பொருள் வைக்கப்படும் போது
   (d) எந்த சூழ்நிலையிலும் உண்டாகாது.
   [விடை: (b) ஆடியின் மீது படும் கதிர்கள் குவிக்கப்படும் போது]

2. 'h' உயரமுள்ள ஒரு மனிதர் ஒரு கண்ணாடியில் அவரது முழு பிம்பத்தையும் காண வேண்டுமெனில், கண்ணாடியின் உயரம் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய அளவு
   (a) $\frac{h}{4}$ (b) $\frac{h}{3}$
   (c) $\frac{h}{2}$ (d) λ
   [விடை: (c) $\frac{h}{2}$]

3. ஒரு மின்விளக்கு இருசமதள ஆடிக்கு இடையில் 60^{o} கோணத்தில் சாய்ந்துள்ளது. எனில் உருவாகும் பிம்பங்களின் எண்ணிக்கை
   (a) 2 (b) 4
   (c) 5 (d) 6 [விடை: (c) 5]

4. இரு சமதள ஆடிகள் 72^{o} ல் சாய்ந்துள்ளன. இவற்றிற்கிடையே வைக்கப்பட்டுள்ள ஒரு புள்ளி போன்ற பிம்பங்களின் எண்ணிக்கை
   (a) 2 (b) 3
   (c) 4 (d) 5 [விடை: (c) 4]

5. சமதள ஆடியின் முன் இருந்து 0.5 m தொலைவில் ஒரு பொருள் உள்ளது. பொருளுக்கும் பிம்பத்திற்கும் இடையே தொலைவு
   (a) 0.5 m (b) 1 m
   (c) 7 m (d) 8 m
   [விடை: (b) 1 m]

6. ஒருவர் ஆடியை நோக்கி 15 m/s வேகத்தில் ஓடி வருகிறார் எனில் அந்த நபரை சார்ந்து பிம்பத்தின் வேகம்
   (a) 15 ms^{-1} (b) 30 ms^{-1}
   (c) 35 ms^{-1} (d) 20 ms^{-1}
   [விடை: (b) 30 ms^{-1}]

7. ஒரு சமதள ஆடியின் மீது ஒளிக் கதிர் குத்தாக விழுகிறது, எனில் விலகுகோணம்
   (a) 0^{o}
   (b) 90^{o}
   (c) எதிரொளிக்கப்படுவதில்லை
   (d) ஏதுமில்லை [விடை: (a) 0^{o}]

8. சமதள ஆடியின் உருப்பெருக்கம்
   (a) –1 (b) +1
   (c) சுழி
   (d) O மற்றும் $+\infty$ க்குமிடையே
   [விடை: (b) +1]

9. ஒரு சிறிய மாயபிம்பம் தோற்றுவிப்பது
   (a) பரவளைய கண்ணாடி
   (b) குவி ஆடி
   (c) குழி ஆடி
   (d) ஏதுமில்லை [விடை: (b) குவி ஆடி]

10. கொடுக்கப்பட்ட ஒரு புள்ளி விளக்கு மூலத்திற்கு பின்வருவனவற்றில் எது இணைகற்றைகளை உருவாக்கும்?
    (a) குழி ஆடி (b) குவி ஆடி
    (c) குழி லென்சு
    (d) 90^{o} ல் சாய்ந்துள்ள இருசமதள ஆடிகள்
    [விடை: (a) குழி ஆடி]

11. ஒரு குவி ஆடி ஒரு பொருளின் பிம்பத்தை உருவாக்குகிறது, எனில் பின்வரும் கூற்றில் எது தவறு?
    (a) பிம்பமானது குவியத்திற்கும் மையத்திற்கும் நடுவே உருவாகும்
    (b) பிம்பத்தின் அளவு சிறியது
    (c) நேரான பிம்பம்
    (d) மெய் பிம்பம் [விடை: (d) மெய் பிம்பம்]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

(iii) இவை இரண்டும் வெவ்வேறு விதமாகச் செயல்படும் (வெவ்வேறு புள்ளிகளில் குவியமடையும்) ஏனெனில் இவை முக்கிய அச்சுக்கு மிக நெருக்கமாகவும், மிகச்சிறிய கோணங்களையே ஏற்படுத்துவதால், இவை கதிர் ஒளியியலில் கோணங்களின் தோராயமாக்கலுக்குத் துணைபுரியும்.



அண்மை அச்சுக்திர்கள் மற்றும் ஒளிக்கதிர்கள்

6. கோளக ஆடியில் தோன்றும் பிம்பங்களை படம் வரைந்து காட்டுக.

விடை.



பிம்பங்களின் தடமறிதல்

(i) முதன்மை அச்சுக்கு இணையாக வரும் கதிர், எதிரொளிப்புக்குப் பின்பு முதன்மை குவியத்தின் வழியே வெளியேறும் அல்லது வெளியேறுவது போன்று தோன்றும் (படம் (அ)).

(ii) முதன்மைக் குவியம் வழியே செல்லும் அல்லது செல்வது போன்று தோன்றும் கதிர், எதிரொளிப்புக்குப் பின்பு, முதன்மை அச்சுக்கு இணையாக வெளியேறும். (படம் (ஆ)).

(iii) வளைவு மையம் வழியாகச் செல்லும் கதிர், எதிரொளிப்புக்குப் பின்பு வளைவு மையம் வழியாகவே செங்குத்துப்படுகதிர் நிலையைப் போன்றே, வெளியேறும் (படம் (இ)).

(iv) ஆடி முனையில் விழும் கதிர், முதன்மை அச்சை, செங்குத்துக் கோடாகக் கொண்டு, எதிரொளிப்பு விதியின் அடிப்படையில் வெளியேறும் (படம் (ஈ).

7. ஒளிவிலகல் எண் வரையறுத்து. சிறு குறிப்பு வரைக.

விடை. (i) வெற்றிடத்தில் (அல்லது காற்றில்) ஒளியின் வேகத்திற்கும், ஊடகத்தில் ஒளியின் வேகத்திற்கும் உள்ள விகிதமே, அந்த ஊடகத்தின் ஒளிவிலகல் எண் ஆகும்.

$$\text{ஊடகத்தின் ஒளிவிலகல் எண் } (n) = \frac{\text{வெற்றிடத்தில் ஒளியின் வேகம் } (c)}{\text{ஊடகத்தில் ஒளியின் வேகம் } (v)}$$

(ii) ஒளிவிலகல் எண்ணுக்கு அலகு இல்லை. வெற்றிடம்தான் மிகக்குறைந்த ஒளிவிலகல் எண்ணைப் பெற்றுள்ளது. அதன் மதிப்பு 1 ஆகும். மற்ற அனைத்து ஊடகங்களின் ஒளிவிலகல் எண்ணும் 1ஐவிட அதிக மதிப்பையே பெற்றிருக்கும். ஒளிவிலகல் எண்ணை ஊடகத்தின் ஒளி அடர்த்தி (Optical density) என்றும் அழைக்கலாம்.

(iii) உயர்ந்த ஒளிவிலகல் எண்ணைப் பெற்றுள்ள ஊடகத்தின் ஒளி அடர்த்தி அதிகம். அவ்வூடகத்தின் வழியே ஒளி மெதுவாகச் செல்லும். இதேபோன்று குறைந்த ஒளிவிலகல் எண்ணைப்பெற்றுள்ள ஊடகத்தின் ஒளி அடர்த்தி குறைவு. அவ்வூடகத்தின் வழியே ஒளி வேகமாகச் செல்லும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

பொருள் ஈரில்லாத் தொலைவில் உள்ள போது, $u = -\infty$, , மற்றும் $v = 2.5$ cm (விழி லென்சுக்கும் விழித்திரைக்கும் இடையே உள்ள தொலைவு). பெருமக் குவியத்தொலைவுடன் (f_{max}) சிரமமின்றி விழியினால் பொருளைக் காணும் நிலையில்

$$\frac{1}{f_{max}} = \frac{1}{2.5cm} - \frac{1}{-\infty}$$

$$f_{max} = 2.5 \text{ cm}$$

(vi) பொருள் அண்மைப் புள்ளியில் உள்ள போது, $u = -25$ cm, மற்றும் $v = 2.5$ cm (விழி லென்சுக்கும் விழித்திரைக்கும் இடையே உள்ள தொலைவு). சிறுமக்குவியத் தொலைவுடன் f_{min} விழியினைச் சுருக்கி பொருளைக் காணும் நிலையில்.

$$\frac{1}{f_{min}} = \frac{1}{2.5\text{cm}} - \frac{1}{-25\text{cm}}$$

$$f_{min} = 2.27 \text{ cm}$$

(vii) $f_{max} - f_{min} = 0.23$ cm விழிலென்சின் குவியத் தொலைவில் ஏற்படும் இச்சிறிய வேறுபாட்டினால் ஈரில்லாத் தொலைவிலிருந்து அண்மை நிலைப் புள்ளிவரை பொருள்களை நம்மால் காணமுடிகிறது.

பயிற்சி கணக்குகள்

1. ஒரு கண்ணாடியால் செய்யப்பட்ட இருபுற குவிலென்சின் ஒளி விலகல் எண் 1.5. ஒவ்வொன்றின் வளைவு ஆரங்கள் முறையே 20 செமீ, எனில் லென்சின் குவியதொலைவைக் கண்டுபிடி. ஒரு பொருளானது லென்சிலிருந்து 15 செமீ. தொலைவில் வைக்கப்படும் போது பிம்பம் உருவாகும் நிலை யாது?

தீர்வு.

$$\frac{1}{f} = (n-1)\left(\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right)$$

$$= (1.5-1)\left(\frac{1}{20} - \frac{1}{-20}\right) = \frac{1}{20}$$

$$f = 20 \text{ செமீ.}$$

ஆனால் $\frac{1}{v} - \frac{1}{-u} = \frac{1}{f}$ (லென்ஸ் சமன்பாடு)

$$\frac{1}{v} - \frac{1}{-15} = \frac{1}{20} \qquad (\because u = 15 \text{ cm})$$

$v = -60$ செமீ. (பொருள் உள்ள பக்கத்தில் பிம்பம் உருவாகும்)

2. 1.5 ஒளி விலகல் எண் உடைய ஒரு குவிலென்சின் குவியதூரம் காண். அதன் வளைவு ஆரம் R.

தீர்வு.

$$\frac{1}{f} = (n-1)\left(\frac{1}{R_1} - \frac{1}{R_2}\right)$$

$n = 1.5$; $R_1 = R$ மற்றும் $R_2 = -R$

$$\therefore \frac{1}{f} = (1.5-1)\left(\frac{1}{R} - \frac{1}{-R}\right)$$

$$= 0.5 \times \frac{2}{R} = \frac{1}{R}$$

$$\therefore f = R$$

3. ஒரு பொருளானது குவிலென்சின் முக்கிய குவியத்தில் வைக்கப்படுகிறது. லென்சு சமன்பாட்டினைக் கொண்டு பிம்பம் உருவாகும் இடத்தை காண்.

தீர்வு.



$u = -f$ எனில்

லென்ஸ் சமன்பாட்டிலிருந்து

$$\frac{1}{v} - \frac{1}{-f} = \frac{1}{f} \text{ (அ) } \frac{1}{v} = 0$$

$$\therefore v = \infty$$

பிம்பம் முடிவிலா தொலைவில் இருக்கும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

அலகு 7

கதிர்வீச்சு மற்றும் பருப்பொருளின் இருமைப்பண்பு

குறிப்புச் சட்டகம்

7.1 அறிமுகம்
7.1.1 எலக்ட்ரான் உமிழ்வு (Electron emission)
7.2 ஒளிமின் விளைவு (Photoelectric effect)
7.2.1 ஹெர்ட்ஸ், ஹால்வாக்ஸ் மற்றும் லெனார்டு ஆகியோரது சோதனைகள்
7.2.2 ஒளிமின்னோட்டத்தின் மீதான படுகதிர் செறிவின் விளைவு
7.2.3 ஒளிமின்னோட்டத்தின் மீதான மின்னழுத்த வேறுபாட்டின் விளைவு
7.2.4 நிறுத்து மின்னழுத்தத்தின் மீதான படுகதிர் அதிர்வெண்ணின் விளைவு
7.2.5 ஒளிமின் விளைவு விதிகள்
7.2.6 ஆற்றல் குவாண்டமாக்கல் பற்றிய கருத்து
7.2.7 ஒளியின் துகள் இயல்பு பற்றிய ஐன்ஸ்டீனின் விளக்கம்
7.2.8 ஒளி மின்கலங்களும் அதன் பயன்பாடுகளும்
7.3 பருப்பொருள் அலைகள் (Matter waves)
7.3.1 அறிமுகம் – துகள்களின் அலை இயல்பு
7.3.2 டி ப்ராய் அலைநீளம்
7.3.3 எலக்ட்ரான்களின் டி ப்ராய்
7.3.4 டேவிசன்-ஜெர்மர் சோதனை
7.3.5 எலக்ட்ரான் நுண்ணோக்கி
7.4 x-கதிர்கள்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் :

1. λe அலைநீளம் கொண்ட எலக்ட்ரான் மற்றும் λp கொண்ட ஃபோட்டான் ஆகியவை ஒரே ஆற்றலைப் பெற்று இருப்பின், அலை நீளங்கள் λe மற்றும் λp இடையிலான தொர்பு *(NEET 2013)*

(a) $\lambda_p \propto \lambda_e$ (b) $\lambda_p \propto \sqrt{\lambda_e}$

(c) $\lambda_p \propto \frac{1}{\sqrt{\lambda_e}}$ (d) $\lambda_p \propto \lambda_e^2$

[விடை: (d) $\lambda_p \propto \lambda_e^2$]

2. எலக்ட்ரான் நுண்ணோக்கியில் பயன்படும் எலக்ட்ரான்கள் 14 kV மின்னழுத்த வேறுபாட்டினால் முடுக்கப்படுகின்றன. இந்த மின்னழுத்த வேறுபாடு 224 kV ஆக அதிகரிக்கும்போது, எலக்ட்ரானின் டி ப்ராய் அலை நீளமானது

(a) 2 மடங்கு அதிகரிக்கும்
(b) 2 மடங்கு குறையும்
(c) 4 மடங்கு குறையும்
(d) 4 மடங்கு அதிகரிக்கும்

[விடை: (c) 4 மடங்கு குறையும்]

3. 3×10^{-6} g நிறை கொண்ட துகளின் அலைநீளம் மற்றும் 6×10^6 ms^{-1} திசைவேகத்தில் நகரும் எலக்ட்ரானின் அலைநீளம் ஆகியவை சமமாக இருப்பின், துகளின் திசைவேகம்

(a) 1.82×10^{-18} ms^{-1}
(b) 9×10^{-2} ms^{-1}
(c) 3×10^{-31} ms^{-1}
(d) 1.82×10^{-15} ms^{-1}

[விடை: (d) 1.82×10^{-15} ms^{-1}]

4. λ அலைநீளமுள்ள கதிர்வீச்சினால் ஒரு உலோகப் பரப்பு ஒளியூட்டப்படும் போது, அதன் நிறுத்து மின்னழுத்தம் V ஆகும். 2λ அலைநீளமுள்ள ஒளியினால் அதே பரப்பு ஒளியூட்டப்பட்டால், நிறுத்து மின்னழுத்தம் $\frac{V}{4}$ ஆகும். எனில் அந்த உலோகப்பரப்பிற்கான பயன்தொடக்க அலைநீளம் *(NEET 2016)*

(a) 4λ (b) 5λ

(c) $\frac{5}{2}\lambda$ (d) 3λ

[விடை: (d) 3λ]

5. 330 nm அலைநீளம் கொண்ட ஒளியானது 3.55 *eV* வெளியேற்று ஆற்றல் கொண்ட உலோகத்தின் மீது படும்போது, உமிழப்படும் எலக்ட்ரான் அலைநீளமானது ($h = 6.6 \times 10^{-34}$Js எனக் கொள்க)

(a) $< 2.75 \times 10^{-9}$ m
(b) $\geq 2.75 \times 10^{-9}$ m
(c) $\leq 2.75 \times 10^{-12}$ m
(d) $< 2.5 \times 10^{-10}$ m

[விடை: (b) $\geq 2.75 \times 10^{-9}$ m]

6. ஒளி உணர் பரப்பு ஒன்று அடுத்தடுத்து λ மற்றும் $\frac{\lambda}{2}$ அலைநீளம் கொண்ட ஒன்றை நிற ஒளியினால் ஒளியூட்டப்படுகிறது. இரண்டாவது நேர்வில் உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல் ஆனது முதல் நேர்வில் உமிழப்படும் எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றலை விட 3 மடங்காக இருப்பின், உலோகப் பரப்பின் வெளியேற்று ஆற்றலானது *(NEET 2015)*

(a) $\frac{hc}{\lambda}$ (b) $\frac{2hc}{\lambda}$

(c) $\frac{hc}{3\lambda}$ (d) $\frac{hc}{2\lambda}$

[விடை: (d) $\frac{hc}{2\lambda}$]

7. ஒளிமின் உமிழ்வு நிகழ்வில், ஒரு குறிப்பிட்ட உலோகத்தின் பயன்தொடக்க அதிர்வெண்ணை விட 4 மடங்கு அதிர்வெண் கொண்ட கதிர்வீச்சு அந்த உலோகப்பரப்பில் படும்போது, வெளிப்படும் எலக்ட்ரானின் பெரும திசைவேகமானது

(a) $\sqrt{\frac{h\nu_0}{m}}$ (b) $\sqrt{\frac{6h\nu_0}{m}}$

(c) $2\sqrt{\frac{h\nu_0}{m}}$ (d) $\sqrt{\frac{h\nu_0}{2m}}$

[விடை: (b) $\sqrt{\frac{6h\nu_0}{m}}$]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

(v) ஒளி மின் உமிழ்வே இச்செயலுக்கு காரணம் என பின்னர் கண்டறியப்பட்டது. புறஊதாக் கதிர்கள் உலோகக் கோளத்தின் மீது படும்போது அதன் மேற்பரப்பிலிருந்து எலக்ட்ரான்கள் உமிழப்படுவதால்தான் தீப்பொறியின் தன்மை தீவிரமடைகிறது.

ஹால்வாக்ஸ் சோதனை:

(i) மின்காப்புத் தூணின் மீது வைக்கப்பட்ட தூய்மையான வட்ட வடிவ துத்தநாகத் தட்டு ஒன்று தங்க இலை மின்னூட்டங் காட்டியுடன் ஒரு கம்பி மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

(ii) வில் விளக்கிலிருந்து வரும் புறஊதாக் கதிர்களை மின்னூட்டமற்ற துத்தநாகத் தட்டின் மீது படுமாறு செய்தால், தட்டானது நேர்மின்னூட்டத்தைப் பெறுகிறது. ஆகவே இலைகள் ஒன்றுக்கொன்று விலகல் அடைகின்றன. (படம் (அ)).



(அ) மின்னூட்டமற்ற துத்தநாகத் தட்டு
(ஆ) எதிர்மின்னூட்டம் பெற்ற துத்தநாகத் தட்டு
(இ) நேர் மின்னூட்டம் பெற்ற துத்தநாகத் தட்டு
ஆகியவை மீது புறஊதாக் கதிர்கள் படுதல்

(iii) மேலும் எதிர் மின்னூட்டம் பெற்ற துத்தநாகத் தட்டின் மீது புற ஊதாக் கதிர்களைப் படுமாறு செய்தால், மின் துகள்கள் வேகமாக கசிவதால் இலைகள் மூடிக் கொள்கின்றன (படம் (ஆ)).

(iv) நேர் மின்னூட்டம் பெற்ற துத்தநாகத் தட்டின் புறஊதாக் கதிர்கள் படும்போது, அது மேலும் நேர்மின்னூட்டம் கொண்டதாக மாறுகிறது.

(v) அதனால் இலைகள் மேலும் திறந்து கொள்கின்றன (படம் (இ)).

(vi) மேற்கண்ட சோதனைகளிலிருந்து, புறஊதாக் கதிர்களின் செயல்பாட்டினால் துத்தநாகத் தட்டிலிருந்து எதிர் மின்னூட்டம் பெற்ற எலக்ட்ரான்கள் உமிழப்படுகின்றன என்று முடிவாகிறது.

லெனார்டு சோதனை:

(i) எலக்ட்ரான் உமிழ்வு நிகழ்வினை லெனார்டு என்பவர் விரிவாகச் சோதனை செய்தார்.

(ii) அவரது எளிய சோதனை அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

(iii) இந்த சோதனைக் கருவியில் A மற்றும் C என்ற இரு உலோக தட்டுகள் வெற்றிடமாக்கப்பட்ட குவார்ட்ஸ் குழாயினுள் வைக்கப்பட்டுள்ளன.

(iv) கால்வனாமீட்டர் G மற்றும் மின்கலத் தொகுப்பு B ஆகியவை மின்சுற்றில் இணைக்கப்பட்டுள்ளன.



லெனார்டு சோதனை அமைப்பு

(v) C எனும் எதிர்மின் தட்டின் மீது புறஊதாக் கதிர்கள் படும்போது, மின்சுற்றில் மின்னோட்டம் பாய்வதை கால்வனாமீட்டரின் விலக்கம் மூலம் அறியலாம்.

(vi) ஆனால், புறஊதாக் கதிர்கள் நேர்மின் தட்டின் மீது படும் போது, சுற்றில் எவ்வித மின்னோட்டமும் ஏற்படுவதில்லை.

(vii) மேற்கண்ட சோதனைகளிலிருந்து, எதிர்மின் தட்டின் மீது புறஊதாக் கதிர்கள் விழும்போது எலக்ட்ரான்கள் உமிழப்படுகின்றன.

(viii) அவை நேர்மின் தட்டு A வினால் கவரப்படுகின்றன என்று முடிவாகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

14. 81 V மின்னழுத்த வேறுபாட்டினால் முடுக்கப்படும் எலக்ட்ரானின் டி ப்ராய் அலை நீளத்தின் மதிப்பு என்ன? இந்த அலைநீளம் மின்காந்த நிறமாலையில் எந்தப் பகுதியில் அமையும்?

கொடுக்கப்பட்டவை:

எலக்ட்ரான் முடுக்கப்படும் மின்னழுத்தம் = 81 V

கண்டறிய:

(i) டி-ப்ராய் அலைநீளத்தின் மதிப்பு = ?

(ii) மின் காந்த நிறமாலையில் எப்பகுதியில் அமையும் = ?

தீர்வு $\lambda = \frac{h}{\sqrt{2mE}} = \frac{h}{\sqrt{2mqV}}$

எலக்ட்ரானுக்கு,

$$\lambda_e = \frac{h}{\sqrt{2m_e.e.V}}$$

$$= \frac{6.6\times10^{-34}}{\sqrt{2\times9.1\times10^{-31}\times1.6\times10^{-19}\times81}}$$

$$= \frac{6.6\times10^{-34}}{\sqrt{2358.7\times10^{-50}}}$$

$$= \frac{6.6\times10^{-34}}{48.57\times10^{-25}} = 0.1358\times10^{-9}$$

$$= 1.36\times10^{-10}\text{ m (or) } 1.36\text{ Å}$$

இந்த அலைநீளம் மின்காந்த நிறமாலையில் X-கதிர்களை சார்ந்திருக்கும்.

15. 512 வோல்ட் மின்னழுத்தம் மூலம் முடுக்கப்படும் புரோட்டான்களின் டி ப்ராய் அலைநீளம் மற்றும் X வோல்ட் மின்னழுத்தம் மூலம் முடுக்கப்படும் ஆல்ஃபா துகள்களின் டீ பிராய் அலைநீளம் இடையே உள்ள தகவு 1 எனில், X-இன் மதிப்பைக் காண்க.

கொடுக்கப்பட்டவை:

முடுக்கப்படும் புரோட்டான்களின் மின்னழுத்தம் = 512 வோல்ட்

முடுக்கப்படும் ஆல்பா துகளின் மின்னழுத்தம் λ = வோல்ட்

கண்டறிய:

λ_p மற்றும் λ_α ன் விகிதம்

தீர்வு முடுக்கப்படும், புரோட்டான்களின் மின்னழுத்தம் = 512 V

முடுக்கப்படும் α துகளின் மின்னழுத்தம் = X வோல்ட்

புரோட்டானின் நிறை $= m_p$

α துகளின் நிறை $= 4\ m_p$

புரோட்டானின் மின்சுமை $= e$

α துகளின் மின்சுமை $= 2\ e$

புரோட்டானின் டி ப்ராய் அலைநீளம் $= \lambda_p$

α துகளின் டி ப்ராய் அலைநீளம் $= \lambda_\alpha$

$$\lambda = \frac{h}{\sqrt{2meV}}$$

அலை நீளங்களின் விகிதம் $= \frac{\lambda_p}{\lambda_\alpha} = 1$

$$\lambda_p = \frac{h}{\sqrt{2m_p e\times512}}$$

$$\lambda_\alpha = \frac{h}{\sqrt{2\times4m_p\times2eX}}$$

$$\frac{\lambda_p}{\lambda_\alpha} = \frac{\sqrt{16m_p eX}}{\sqrt{2m_p e512}} = \sqrt{\frac{8X}{512}}$$

$$\therefore 1 = \sqrt{\frac{8X}{512}}$$

அல்லது, $\sqrt{512} = \sqrt{8X}$

$\Rightarrow 512 = 8X$

$$\therefore X = \frac{512}{8} = 64\text{ V}$$

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது 1 மதிப்பெண்

1. போட்டோ எலக்ட்ரான் சோதனையில் ஒளியின் அடர்த்தி இரட்டிப்பாகும் போது நிறுத்து மின்னழுத்தம்.
   (a) இரட்டிப்பாகும்
   (b) பாதியாகும்
   (c) இரட்டிப்பைவிட அதிகமாகும்
   (d) இருமடங்கை விட குறைவு

   [விடை: (c) இரட்டிப்பைவிட அதிகமாகும்]

2. ஐன்ஸ்டீனின் ஒளி மின் சமன்பாட்டின்படி எது K.E. மற்றும் அதிர்வெண்ணுக்கான வரைபடம்

(a) 

(b) 

(c) 

(d) 

[விடை: (b) ]

3. எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் இரு மடங்காகும் போது அதன் டி பிராய் அலை நீளத்தில் ஏற்படும் மாற்றம்.
   (a) $\frac{1}{2}$ (b) 2
   (c) $\frac{1}{\sqrt{2}}$ (d) $\sqrt{2}$

   [விடை: (c) $\frac{1}{\sqrt{2}}$]

4. ஒளி அதிர்வெண் υ ஒரு பொருளின் மீதுவிழும் போது அதன் தெவிட்டிய அதிர் வெண் υ_0 உமிழப்பட்ட எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல் இதற்கு நேர் விகிதத்தில் இருக்கும்.
   (a) $\upsilon - \upsilon_0$ (b) υ
   (c) $\sqrt{v - v_0}$ (d) υ_3

   [விடை: (a) $\upsilon - \upsilon_0$]

5. 6000 Å அலைநீளமுடைய போட்டானின் ஆற்றல்
   (a) 3.3×10^{-19} J (b) 4.4×10^{-19} J
   (c) 3.3×10^{-17} J (d) 4.4×10^{-19}

   [விடை: (a) 3.3×10^{-19} J]

6. பின்வருவனவற்றில் எது டி ப்ராய் அலை நீள உந்தத்திற்கான வரைபடம்

(a) 

(b) 

(c) 

(d) 

[விடை: (d) ]

7. ஒரு ஒளிமின்கலத்தின் ஆனோடு மின்னழுத்தம் நிலையாக உள்ளது. கேதோடு மீது விழும் ஒளியின் அலைநீளம் படிப்படியாக மாற்றப்படுகிறது. அதன் தகடு மின்னோட்டம் I மாறுவது.

(a) 

(b) 

(c) 

(d) 

[விடை: (a) ]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

47. **குவாண்டம் கொள்கையை விளக்கியவர்**
(a) மேக்ஸ்வெல் (b) மேக்ஸ்பிளாங்க்
(c) ஐன்ஸ்டீன் (d) ஹைஜென்ஸ்
[விடை: (b) மேக்ஸ்பிளாங்க்]

48. **m_e என்பது ஒளி எலக்ட்ரானின் நிறை வெளியிடும் திசைவேகம் 2 m/s எனில் தொடர்புடைய இயக்க ஆற்றல்**
(a) $2\, m_e$ (b) $4\, m_e$
(c) $\frac{m_e}{2}$ (d) $\frac{m_e}{4}$
[விடை: (a) $2\, m_e$]

49. **ஒரு ஒளி உமிழ்க்கலனில் கேதோடில் _____ உலோகம் பூசப்பட்டுள்ளது.**
(a) தாழ் வெளியேற்று ஆற்றல்
(b) உயர் வெளியேற்று ஆற்றல்
(c) ஒளிபுகும் (d) ஒளிபுகா
[விடை: (a) தாழ் வெளியேற்று ஆற்றல்]

50. **ஒரு ஒளி மின் கலம் _____ ஆற்றலை _____ ஆற்றலாக மாற்றுகிறது.**
(a) ஒளி, ஒலி (b) ஒளி, மின்
(c) ஒலி, மின் (d) ஒளி. வெப்ப
[விடை: (a) ஒளி, ஒலி]

51. **ஐன்ஸ்டீனின் ஒளி மின் சமன்பாடு**
(a) வட்டம் (b) கோணம்
(c) நேர்க் கோடு (d) நீள் வட்டம்
[விடை: (c) நேர்க்கோடு]

52. **போட்டோ எலக்ட்ரானின் பெரும இயக்க ஆற்றல்**
(a) $(h\upsilon + w)$ (b) $(h\upsilon - w)$
(c) $h\upsilon w$ (d) $\frac{hv}{w}$
[விடை: (b) $(h\upsilon - w)$]

53. **எளிய ஒளி உமிழ்க் கலனில் ஆனோடு**
(a) கண்ணாடிக்குழாய்
(b) குவார்ட்ஸ் படிகம்
(c) பிளாட்டினம் இழை
(d) இரும்புக்கம்பி
[விடை: (c) பிளாட்டினம் இழை]

54. **ஒரு ஒளி உணர் தகட்டின் மீது 5000Å அலை நீளமுடைய ஒளி விழுகிறது. அதன் ஒளிமின் வெளியேறு ஆற்றல் 1.9 eV. எனில், போட்டோ எலக்ட்ரானின் இயக்க ஆற்றல்**
(a) 0.58 eV (b) 2.48 eV
(c) 1.24 eV (d) 1.16 eV
[விடை: (a) 0.58 eV]

55. **இரு போட்டான்கள் ஒவ்வொன்றின் ஆற்றல் 2.5 eV உலோகப் பரப்பின் மீது சீராக படுகிறது. உலோகத்தின் வெளியேற்று ஆற்றல் 4.5 eV எனில் உலோகத்தின் பரப்பிலிருந்து**
(a) ஒரு எலக்ட்ரான் உமிழப்படும்
(b) இரு எலக்ட்ரான்கள் உமிழப்படும்
(c) அதிக எலக்ட்ரான்கள் உமிழப்படும்
(d) உமிழ்தல் ஏதும் இல்லை
[விடை: (d) உமிழ்தல் ஏதும் இல்லை]

56. **ஒரு சில உலோகத்தின் பயனுறு அலை நீளம் 3000Å வெளியேற்று ஆற்றல்**
(a) 4.1 J (b) 4.1 eV
(c) 4.1 MeV (d) 4.1 keV
[விடை: (b) 4.1 eV]

57. **ஒரு போட்டானின் ஒளியின் ஆற்றல் 3 eV எனில் போட்டானின் அலைநீளம்**
(a) 4125 nm (b) 41250 nm
(c) 412.5 nm (d) 4 nm
[விடை: (a) 4125 nm]

58. **சோடியம் மற்றும் தாமிரம் இவற்றின் வெளியேற்று ஆற்றல் 2.3 eV மற்றும் 4.5 eV எனில் அலை நீளங்களின் விகிதம்**
(a) 1 : 2 (b) 4 : 1
(c) 2 : 1 (d) 1 : 4
[விடை: (c) 2 : 1]

59. **பருப்பொருள் அலைநீளம் இதைச் சார்ந்ததல்ல.**
(a) நிறை (b) திசை வேகம்
(c) உந்தம் (d) மின்னூட்டம்
[விடை: (d) மின்னூட்டம்]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

கூடுதல் கணக்குகள்

1. ஒரு எலக்ட்ரான் மற்றும் ஒரு புரோட்டான் ஒவ்வொன்றின் அலைநீளம் 1.00 nm (i) அவற்றின் உந்தங்கள் (ii) போட்டானின் ஆற்றல் (iii) எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் இவற்றை காண்.

தீர்வு (i) எலக்ட்ரான் மற்றும் போட்டானின் உந்தங்கள் சமம்.

$$\rho = \frac{h}{\lambda} = \frac{6.63\times10^{-34}}{1.00\times10^{-9}}$$
$$= 6.63 \times 10^{-25}\ \text{kg ms}^{-1}$$

(ii) போட்டானின் ஆற்றல்,

$$E = h\upsilon = h \times \frac{c}{\lambda} = \frac{h}{\lambda}\times c = pc$$
$$pc = 6.63 \times 10^{-25} \times 3 \times 10^{8}\ \text{J}$$
$$= 19.89 \times 10^{-17}\ \text{J}$$
$$= \frac{19.89\times10^{-17}}{1.6\times10^{-19}}\ \text{eV}$$
$$= 1.24 \times 10^{3}\ \text{eV}$$
$$= 1.24\ \text{keV}$$

(iii) எலக்ட்ரானின் இயக்க ஆற்றல்,

$$E_k = \frac{1}{2}m_e V^2 = \frac{p^2}{2m_e}$$
$$= \frac{(6.63\times10^{-25})^2}{2\times9.1\times10^{-31}}\ \text{J}$$
$$= 2.42 \times 10^{-19}\ \text{J}$$
$$= \frac{2.42\times10^{-19}}{1.6\times10^{-19}}\ eV$$
$$= 1.51\ keV$$

2. அறை வெப்பநிலையிலுள்ள ஹைட்ரஜன் வாயுவை ஒரு 12.3 eV எலக்ட்ரான் கற்றை மோதுகிறது. எந்த ஆற்றல் மட்டம் வரை ஹைட்ரஜன் அணு கிளர்ச்சியடையும்? லைமன் வரிசை மற்றும் பால்மர் வரிசையின் இரண்டாம் நிலை அலைநீளங்களை கணக்கிடுக.

தீர்வு ஹைட்ரஜன் அணுவின் *n*வது சுற்றில் எலக்ட்ரானின் ஆற்றல் $E_n = \frac{-13.6}{n^2}\ eV$

12.3 *e*V ஆற்றலுடைய கற்றையானது ஹைட்ரஜன் அணுவில் உட்கவரப்படுகிறது. *n* = 1 முதல் *n* = n மட்டத்திற்கு எலக்ட்ரான் தாவுகிறது.

எனில், $E = E_n - E_1$

$$12.3 = \frac{-13.6}{n^2} - \left(-\frac{13.6}{1^2}\right)$$
$$12.3 = 13.6\left[1-\frac{1}{n^2}\right] \Rightarrow \frac{12.3}{13.6} = 1 - \frac{1}{n^2}$$
$$0.9 = 1 - \frac{1}{n^2} \Rightarrow \frac{1}{n^2} = 1 - 0.9 = 0.1$$
$$n^2 = \frac{1}{0.1} = 10$$
$$\therefore n = 3\ \text{(தோராயமாக)}$$

ஹைட்ரஜன் அணு இரண்டாவது கிளர்வு நிலை வரை கிளர்ச்சியடையும்.

லைமன் வரிசைக்கு $\frac{1}{\lambda} = R\left[\frac{1}{n_f^2} - \frac{1}{n_i^2}\right]$

$$R = 1.097 \times 10^{-7}\ \text{m}^{-1}$$
$$\frac{1}{\lambda} = 1.097 \times 10^{7}\left[\frac{1}{1}-\frac{1}{9}\right] = 1.097 \times 10^{7}\left(\frac{8}{9}\right)$$
$$\therefore \lambda = \frac{9}{1.097\times10^{7}\times8} = \frac{9}{8.776\times10^{7}}$$
$$= 1.025 \times 10^{-7}\text{m} = 102.5\ \text{nm}$$

பால்மர் வரிசைக்கு

$$\frac{1}{\lambda} = 1.097 \times 10^{7}\left[\frac{1}{4}-\frac{1}{16}\right] = 1.097 \times 10^{7}\ \frac{3}{16}$$
$$\therefore \lambda = 4.86\times 10^{-7}\text{m} = 486\ \text{nm}.$$

3. ஹைட்ரஜன் அணுவின் அடிமட்ட நிலை ஆற்றல் – 13.6 v. ஒரு எலக்ட்ரான் –1.5 *e*V முதல் –3.4 eV ஆற்றல் மட்டத்திற்கு தாவுகிறது. உமிழப்பட்ட கற்றை வரிகளின் அலை நீளத்தை கணக்கிடு. அவ்வரிசையின் பெயர் யாது?

தீர்வு ஆற்றல் வேறுபாடு = உமிழப்பட்ட போட்டானின் ஆற்றல்

$$= E_2 - E_1$$
$$= -1.51 - (-3.4) = 1.89\ \text{eV}$$
$$= 1.89 \times 1.6 \times 10^{-19}\ \text{J}$$
$$\lambda = \frac{hc}{E_2 - E_1}$$
$$= \frac{6.6\times10^{-34}\times3\times10^{8}}{1.89\times1.6\times10^{-19}}$$
$$= 6.548 \times 10^{-7}\ \text{m} = 6548\ \text{Å}$$

இது பால்மர் வரிசையினுடைய அலைநீளம்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

அலகு 8

அணு மற்றும் அணுக்கரு இயற்பியல்

குறிப்புச் சட்டகம்

8.1 அறிமுகம்
8.2 வாயுக்களின் வழியே மின்னிறக்கம்
8.2.1 எலக்ட்ரானின் மின்னூட்ட எண்ணைக் கண்டறிதல் – தாம்சன் ஆய்வு
8.2.2 எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பு காணல் மில்லிகனின் எண்ணெய் துளி ஆய்வு
8.3 அணு மாதிரிகள்
8.3.1 ஜே.ஜே. தாம்சன் மாதிரி (தர்ப்பூசணிப்பழ மாதிரி)
8.3.2 ரூதர்போர்டு மாதிரி
8.3.3 போர் அணு மாதிரி
8.3.4 அணு நிறமாலை
8.4 அணுக்கருக்கள்
8.4.1 அணுக்கருவின் கட்டமைப்பு
8.4.2 ஐசோடோப்புகள், ஐசோபார்கள் மற்றும் ஐசோடோன்கள்
8.4.3 அணு நிறையும் அணுக்கரு நிறையும்
8.4.4 அணுக்கருவின் அளவும் அதன் அடர்த்தியும்
8.4.5 நிறை குறைபாடும் பிணைப்பு ஆற்றலும்
8.4.6 பிணைப்பு ஆற்றல் வளைகோடு
8.5 அணுக்கரு விசை
8.6 கதிரியக்கம்
8.6.1 ஆல்பா சிதைவு (Alpha decay)
8.6.2 பீட்டா சிதைவு (Beta decay)
8.6.3 காமா சிதைவு
8.6.4 கதிரியக்க சிதைவு விதி
8.6.5 அரை ஆயுட்காலம்
8.6.6 கார்பன் காலக்கணிப்பு
8.6.7 நியூட்ரான் கண்டுபிடிப்பு
8.7 அணுக்கரு பிளவு
8.8 அணுக்கரு இணைவு (Nuclear fusion)

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் :

1. மின்னழுத்தம் V வோல்ட் மூலமாக முடுக்கப் படும் ஆல்ஃபா துகள் ஒன்று அணு எண் Z கொண்ட அணுக்கருவை நோக்கி மோதலுக்கு உட்பட அனுமதிக்கப்படும் போது, அணுக்கருவிலிருந்து ஆல்பா துகளின் மீச்சிறு அணுகு தொலைவு

(a) $14.4\frac{Z}{V}$ Å (b) $14.4\frac{V}{Z}$ Å

(c) $1.44\frac{Z}{V}$ Å (d) $1.44\frac{V}{Z}$ Å

[விடை: (c) $1.44\frac{Z}{V}$ Å]

2. ஹைட்ரஜன் அணுவில் நான்காவது சுற்றுப்பாதையில் இயங்கும் எலக்ட்ரானின் கோண உந்தம்:

(a) h (b) $\frac{h}{\pi}$

(c) $\frac{4h}{\pi}$ (d) $\frac{2h}{\pi}$

[விடை: (d) $\frac{2h}{\pi}$]

3. $n = 1$ சுற்றுப்பாதைக்கு அயனியாக்க அழுத்தம் 122.4 V கொண்ட அணுவின் அணு எண்:

(a) 1 (b) 2

(c) 3 (d) 4 [விடை: (c) 3]

4. ஹைட்ரஜன் அணுவின் முதல் மூன்று சுற்றுப்பாதைகளின் ஆரங்களின் விகிதம்

(a) 1 : 2 : 3 (b) 2 : 4 : 6

(c) 1 : 4 : 9 (d) 1 : 3 : 5

[விடை: (c) 1 : 4 : 9]

5. கேதோடு கதிர்களின் மின்னூட்டம்

(a) நேர்க்குறி (b) எதிர்க்குறி

(c) நடுநிலை

(d) வரையறுக்கப்படவில்லை

[விடை: (b) எதிர்க்குறி]

6. ஜே.ஜே தாம்சனின் e/m ஆய்வில், எலக்ட்ரான் கற்றைக்குப் பதிலாக மியூவான் [மியூவான் என்பது எலக்ட்ரான் மின்னூட்ட மதிப்பையும் எலக்ட்ரானைப் போல் 208 மடங்கு நிறையும் கொண்ட ஒரு துகள்] கற்றையைப் பயன்படுத்தும் போது சுழி விலக்கத்திற்கான நிபந்தனையை அடைய.

(a) Bன் மதிப்பு 208 மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

(b) Bன் மதிப்பு 208 மடங்கு குறைக்கப்பட வேண்டும்.

(c) Bன் மதிப்பு 14.4 மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

(d) Bன் மதிப்பு 14.4 மடங்கு குறைக்கப்பட வேண்டும்.

[விடை: (c) Bன் மதிப்பு 14.4 மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும்]

7. Li^{++}, He^{+} மற்றும் H ஆகியவற்றில் $n = 2$ விருந்து $n = 1$க்கு நகர்வு ஏற்படும் போது உமிழப்படும் அலைநீளங்களின் விகிதம் :

(a) 1 : 2 : 3 (b) 1 : 4 : 9

(c) 3 : 2 : 1 (d) 4 : 9 : 36

[விடை: (d) 4 : 9 : 36]

8. ஒரு புரோட்டான் மற்றும் ஒரு எலக்ட்ரானின் மின்னழுத்தம் $V=V_0 \ln\left(\frac{r}{r_0}\right)$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. [இங்கு r_0 ஒரு மாறிலி] மின்னழுத்தத்திற்கு போல் அணு மாதிரியைப் பயன்படுத்தினால், முதன்மை குவாண்டம் எண் n ஐப்பொறுத்து n ஆவது சுற்றுப்பாதை r_n இன் மாறுபாட்டின் தன்மை

(a) $r_n \propto \frac{1}{n}$ (b) $r_n \propto n$

(c) $r_n \propto \frac{1}{n^2}$ (d) $r_n \propto n^2$

[விடை: (b) $r_n \propto n$]

9. ^{27}Al அணுக்கரு ஆரம் 3.6 பெர்மி எனில் ^{64}Cu அணுக்கரு ஆரம் ஏறக்குறைய

(a) 2.4 (b) 1.2

(c) 4.8 (d) 3.6

[விடை: (c) 4.8]

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

சமன்பாடு (3) ஐ சமன்பாடு (4) ல் பிரதியிட

$$a_e = \frac{1}{m}eE = \frac{e}{m}E$$



சீரான மின்புலத்தை நிறுவுவதால் எலக்ட்ரானின் பாதையில் ஏற்படும் விலக்கம்

திரையில் எலக்டரான் கற்றை முதலில் வீழ்ந்த நிலையில் இருந்து, தற்போது அது அடைந்துள்ள விலக்கம் y என்க. (படத்தில்) மேலும் இக் கேதோடு கதிர்கள் இணையாகவுள்ள மின்புலத் தகடுகளை அடையும் முன்னர் அதன் மேல்நோக்கிய தொடக்க திசைவேகம் $u = 0$ ஆகும். இம்மின்புலத்தகடுகளின் நீளம் l எனில், மின்புலத்தை கடக்க கேதோடு கதிர்கள் எடுத்துக் கொள்ளும் நேரம் t ஆனது

$$t = \frac{l}{\upsilon} \quad ......(5)$$

எனவே, தகடுகளின் முடிவில் கேதோடு கதிர்கள் அடையும் விலக்கம்

(குறிப்பு: $u = 0$ மற்றும் $a_e = \frac{e}{m}E$)

$$y' = ut + \frac{1}{2}at^2$$

$$\Rightarrow y' = ut + \frac{1}{2}a_e t^2$$

$$= \frac{1}{2}\left(\frac{e}{m}E\right)\left(\frac{l}{\upsilon}\right)^2$$

$$y' = \frac{1}{2}\frac{e}{m}\frac{l^2B^2}{E} \quad ......(6)$$

எனவே திரையில் ஏற்படும் விலக்கம்

$y \propto y' \Rightarrow y = Cy'$

இங்கு C என்பது தகவு மாறிலி. இதன் மதிப்பு மின்னிறக்கக் குழாயின் வடிவமைப்பை பொருத்து அமையும்

$$y = C\frac{1}{2}\frac{e}{m}\frac{l^2B^2}{E} \quad ......(7)$$

சமன்பாடு (7) ஐ மாற்றியமைக்க

$$\frac{e}{m} = \frac{2yE}{Cl^2B^2} \quad .....(8)$$

இச்சமன்பாட்டின் வலது பக்கம் மதிப்புகளைப் பிரதியிட, மின்னூட்ட எண்ணின் மதிப்பு

$$\frac{e}{m} = 1.7 \times 10^{11}\ \mathrm{C\,kg^{-1}}$$

சீரான காந்தப் புலத்தால் மட்டும் உருவாகும் விலக்கம் :

இப்போது மின்புலத்தை நிறுத்திவிட்டு, காந்தப் புலத்தால் மட்டும் ஏற்படும் விலக்கத்தைக் கருதுவோம். எலக்ட்ரானின் பாதைக்கு செங்குத்தாக உள்ள காந்தப்புலத்தால், எலக்ட்ரான் மீது செயல்படும் விசை

$F_m = e\upsilon B$ (எண் மதிப்பு அளவில்)

இவ்விசையானது எலக்ட்ரானுக்கு மையநோக்கு விசையை அளிப்பதால், எலக்ட்ரான் கற்றை அரைவட்டப் பாதையை மேற்கொள்கிறது. எனவே

$$F_m = e\upsilon B = m\frac{\upsilon^2}{R}$$

இங்கு υ என்பது காந்தப் புலத்தினுள் நுழையும் போது எலக்ட்ரான் கற்றையின் திசைவேகம் மற்றும் R என்பது எலக்ட்ரான் கற்றை மேற்கொள்ளும் அரைவட்டப் பாதையின் ஆரம் ஆகும்.

$$eB = m\frac{\upsilon}{R} \Rightarrow \frac{e}{m} = \frac{\upsilon}{BR} \quad .....(9)$$

சமன்பாடு (1) ஐ சமன்பாடு (9)ல் பிரதியிட

$$\frac{e}{m} = \frac{E}{B^2R} \quad .....(10)$$

மின்புலம், காந்தப்புலம் மற்றும் வட்டப்பாதையின் ஆரம் ஆகியவற்றின் மதிப்புகளை அறிந்தால் மின்னூட்ட எண்ணைக் கணக்கிடலாம். இம்முறையில் கண்டறியப்படும் மதிப்பு மற்ற இரு முறைகளிலும் கண்டறியப்படும் மதிப்போடு பொருந்தி வருகின்றது.

2. **எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பைக் கண்டறிய உதவும் மில்லிகன் எண்ணெய்த் துளி ஆய்வினை விவரிக்கவும்.**

விடை. **எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பு காணல் - மில்லிகனின் எண்ணெய்த்துளி ஆய்வு**

(i) இயற்கையின் மிக முக்கிய அடிப்படை மாறிலிகளுள் ஒன்றான எலக்ட்ரானின் மின்னூட்ட மதிப்பைக் காண உதவும் மில்லிகனின் எண்ணெய்த்துளி ஆய்வு, நவீன இயற்பியலில் உள்ள சிறந்த செயல்முறை ஆய்வுகளில் ஒன்றாகும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

மற்றும் N_0 என்பது $t = 0$ நேரத்தில் உள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கை ஆகும். நேரம் ஆக ஆக அணுக்களின் எண்ணிக்கை அடுக்குக்குறி முறைப்படி குறையும் என்பதை இச்சமன்பாட்டிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அனைத்து கதிரியக்க அணுக்கருக்களும் சிதைவடைய முடிவிலா காலம் (infinte) ஆகும் என்பதை இதன் மூலமாக நாம் அறியலாம். சமன்பாடு (4) ஆனது கீழே உள்ள படத்தில் வரைபடமாகக் காட்டப்பட்டுள்ளது.



கதிரியக்கச் சிதைவு விதி

(ix) (கதிரியக்கச்) செயல்பாடு (Activity) அல்லது சிதைவு வீதம் என்ற மற்றுமொரு பயனுள்ள அளவீட்டை நாம் வரையறுக்கலாம். அதாவது, (கதிரியக்கச்) செயல்பாடு அல்லது சிதைவு வீதம் (R) என்பது ஒரு வினாடியில் சிதைவடையும் அணுக்கருக்களின் எண்ணிக்கை ஆகும்.

இது $R = \left|\frac{dN}{dt}\right|$ என குறிக்கப்படுகிறது. R என்பது ஒரு நேர்க்குறி மதிப்புடைய அளவீடு ஆகும்.

(x) சமன்பாடு (4)இலிருந்து,

$$R = \left|\frac{dN}{dt}\right| = \lambda N_0e^{-\lambda t}\text{...........(5)}$$

$$R = R_0\, e^{-\lambda t}\text{...........(6)}$$

இங்கு $R_0 = \lambda N_0$

(xi) சமன்பாடு (4)-உம் கதிரியக்கச் சிதைவு விதிக்கு இணையானதே. இங்கு R_0 என்பது $t = 0$ நேரத்தில் கதிரியக்கப் போருளின் செயல்பாடு மற்றும் R என்பது t நேரத்தில் அதன் செயல்பாடு ஆகும். சமன்பாடு (4) லிருந்து கதிரியக்கச் செயல்பாடும் அடுக்குக்குறியீட்டு அடிப்படையில் சிதைவடையும் தன்மை கோண்டது என்பது தெரிகிறது. எந்தவொரு கணம் t-இலும் அக்கணத்தில் சிதைவடையாமல் இருக்கும் அணுக்களின் எண்ணிக்கையை வைத்து கதிரியக்கச் செயல்பாட்டிட (R) எழுதலாம்.

$N = N_0e^{-\lambda t}$, சமன்பாடு (6)லிருந்து

$$R = \lambda N\text{...........(7)}$$

(xii) சமன்பாடு (7)-இன்படி, எந்தவொரு கணம் t-யிலும் கதிரியக்கச் செயல்பாடானது அக்கணத்தில் உள்ள சிதைவடையா அணுக்கருக்களின் எண்ணிக்கை N மற்றும் சிதைவு மாறிலி λ ஆகியவற்றின் பெருக்கற்பலனுக்கு சமமாகும்.நேரத்தைப் பொருத்து N குறைந்து கொண்டே இருப்பதால், R-ம் குறைந்து கோண்டே இருக்கும்.

(xiii) கதிரியக்கச் செயல்பாட்டின் SI அலகு பெக்கரல் (Bq). மேலும் ஒரு பெக்கரல் என்பது ஒரு வினாடிக்கு ஒரு சிதைவைத் தரும் தனிமத்தின் செயல்பாட்டைக் குறிக்கும். கதிரியக்கச் செயல்பாட்டிற்கு மற்றொரு கியூரி (Ci) என்ற அலகும் உள்ளது.

1 கியூரி = 1 Ci = 3.7×10^{10} சிதைவுகள் / வினாடி

1 Ci = 3.7×10^{10} Bq

11. நியூட்ரினோவின் பண்புகளை விளக்கி பீட்டா சிதைவில் அதன் பங்கினை எடுத்துரைக்க.

விடை. நியூட்ரினோ (ν)

(i) பீட்டா சிதைவின் பொது, தாய் அணுக்கருவிலுள்ள நியூட்ரான் ஒன்று எலக்ட்ரானை வெளிவிட்டு சேய் அணுக்கருவாக மாறுகின்றது என்றே முதலில் கருதப்பட்டது.

$${}^{A}_{Z}X \rightarrow {}^{A}_{Z+1}Y + e^- \quad \text{.........(1)}$$

(ii) ஆனால் அணுக்கருவிலிருந்து வெளியேறும் எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் மதிப்பு ஆய்வுகளின் முடிவுகளுடன் பொருந்தவில்லை. ஆல்பா சிதைவில், ஆல்பா துகள்கள் குறிப்பிட்ட சில அனுமதிக்கப்பட்ட, தனித்தனியான (discrete) குறிப்பிட்ட ஆற்றல் மதிப்புகளை மட்டுமே பெற்றுள்ளன. ஆனால் பீட்டா சிதைவில், பீட்டா துகள்கள் (எலக்ட்ரான்கள்) தொடர்ச்சியான ஆற்றல் மதிப்புகளைப் பெற்று விளங்குகின்றன.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

கூடுதல் வினாக்கள்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது 1 மதிப்பெண்

1. உமிழப்பட்ட X கதிர்களின் செறிவு [X குழாயிலிந்து வருபவை] மற்றும் அலை நீளத்திற்கும் இடையேயான வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது கூரியமுனை குறிப்பவை (A, B)



(a) பட்டை நிறமாலை
(b) தொடர்நிற மாலை
(c) வெண்மை கதிர்வீச்சுகள்
(d) சிறப்புக் கதர் வீச்சுகள்

[விடை: (d) சிறப்புக் கதிர்வீச்சுகள்]

2. B - துகளின் ஆற்றல் கற்றை [N(E) – B ஆற்றல்] வரைபடம்

(a)


(b)


(c)


(d)


[விடை: (b)


]

3. பின்வருவனவற்றில் எந்த அணு தாழ் அயனியாக்க அழுத்தம் உடையது?

(a) $_8O^{16}$ (b) $_{18}Ar^{40}$
(c) $_{55}Cs^{133}$ (d) $_7N^{14}$

[விடை: (c) $_{55}Cs^{133}$]

4. பின்வரும் வரைபடம் ஒரு எலக்ட்ரானின் ஆற்றல் மட்டத்தினை காட்டுகிறது. எது போட்டானின் உமிழ்தலைக் குறிக்கிறது?



(a) I (b) II
(c) III (d) IV

[விடை: (c) III]

குறிப்பு:

I ஒளி உமிழப்படுவதில்லை

II $Rhc\left(\frac{1}{3^2}-\frac{1}{4^2}\right)=\frac{7Rhc}{144}$

III $n_i = 4, n_f = 2$

$E = Rhc\left(\frac{1}{2^2}-\frac{1}{4^2}\right)=\frac{3Rhc}{16}$

IV $ni = 2, n_f = 1$

$e = Rhc\ \frac{1}{1^2}-\frac{1}{2^2}=\frac{3Rhc}{4}=2$

5. அணுக்கரு ஒன்றின் நிறைவழு 0.03*amu* எனில் அதன் பிணைப்பு ஆற்றல்

(a) 27.93eV (b) 2.793KeV
(c) 27.93GV (d) 27.93 MeV

[விடை: (d) 27.93MeV]

6. $_{13}Al^{27}$, $_{14}Si^{28}$ என்பது

(a) ஐசோபார் (b) ஐசோடோப்பு
(c) ஐசோசர் (d) ஐசோடோன்

[விடை: (d) ஐசோடோன்]

7. $_{80}Hg^{198} + X \rightarrow {}_{79}AU^{198} + {}_1H^1$ என்ற வினையில் X என்பது

(a) ஹைட்ரஜன் (b) நியூட்ரான்
(c) எலக்ட்ரான் (d) புரோட்டான்

[விடை: (b) நியூட்ரான்]

அலகு 8

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

6. அணு எண் என்றால் என்ன?

விடை. அணுக்கரு ஒன்றிலுள்ள புரோட்டான்களின் எண்ணிக்கை அணு எண் எனப்படும்– அதை Z என்ற குறியீட்டினால் அறியலாம்.

7. நிறை எண் என்றால் என்ன?

விடை. அணுக்கருவில் காணப்படும் நியூட்ரான்கள் மற்றும் புரோட்டான்களின் மொத்த எண்ணிக்கை நிறை எண் எனப்படும். அது A என்று குறிக்கப்படுகிறது. எனவே, $A = Z+N$

8. நியூக்ளியான்கள் என்பவை யாவை? அடிப்படைத் துகள்களின் நிறை யாது?

விடை. அணுக்கருவின் இரண்டு கூறுகள், நியூட்ரான் மற்றும் புரோட்டான்கள், நியூக்ளியான்கள் எனும் பொதுப்பெயரினால் அழைக்கப்படுகின்றன. ஒரு புரோட்டானின் நிறை 1.6726×10^{-27}kg ஆகும். இது எலக்ட்ரானின் நிறையைப்போல் ஏறத்தாழ 1836 மடங்காகும். நியூட்ரானின் நிறை புரோட்டானின் நிறையை விட சற்றே அதிகமானது. அதாவது அதன் நிறை1.6749×10^{-27}kg.

9. ஐசோடோப்புகள் ஒரே மாதிரியான வேதிப் பண்புகளை பெற்று விளங்குவது ஏன்?

